ஊடக அறிவித்தல் இல. 13

# தேர்தல் ஆணைக்குழு

**2021.04.22 ஆந் திகதி கூடிய தேர்தல் ஆணைக்குழு, பின்வரும் தீர்மானங்களை எடுத்துள்ளதென்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது:-**

- அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2019 ஆம் ஆண்டுக்குரிய கணக்காய்வுசெய்யப்பட்ட கணக்கறிக்கைகளை உரிய காலப்பகுதியில் வழங்காத 04 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளை தேர்தல் ஆணைக்குழுவுக்கு அழைத்து அது குறித்து கலந்துரையாடப்பட்டது. அவற்றில் 02 அரசியல் கட்சிகள் அதன்போது அக்கலந்துரையாடலின்போது முன்வைத்த கோரிக்கைப்படி அவ்வறிக்கைகளை வழங்குவதற்கு தயை காலமொன்றை வழங்குதலும், ஆணைக்குழுவுக்கு வருகைதராத அதேபோல் அவ்வறிக்கைகளைச் சமர்ப்பிக்காத 02 அரசியல் கட்சிகள் குறித்த இறுதி முடிவொன்றை அடுத்த ஆணைக்குழுக் கூட்டத்தின்போது எடுத்தலும்.

- உட்பூசல்கள் காரணமாக சில குழுக்களினால் உரிமை கோரப்படும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் சம்பந்தமாக தேர்தலொன்றின்போது குறித்த குழுக்களை அழைத்து தகவல்கள் குறித்து விசாரித்து ஆணைக்குழுவுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய தரப்பை அக்கட்சியின் உத்தியோகப்பற்றுள்ள குழுவாக ஏற்றங்கீகரித்தலும், உட்பூசல்களைத் தீர்த்துக்கொள்ள முற்படாத கட்சிகளை, அத்தகைய பூசல்களைத் தீர்த்துக்கொள்ளும் வரை முடங்கிய நிலையிலுள்ளவையாகக் கருதுதலும், அத்தகைய கட்சிகளை தேர்தல்களின்போது வேட்புமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு மாத்திரம் தற்காலிகமாக ஏற்றுக்கொள்வதிலிருந்து தவிர்ந்துகொள்ளலும்.

**சமன் ஸ்ரீ ரத்னாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
இராஜகிரிய.

2021.04.23